முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

S.C.No.69/2024

LW-8, (PW -7)

| பெயர்; | வசந்தகுமார் | மதம் | |
|---|---|---|---|
| த.பெ. | லோகநாதன் | தொழில் | |
| ஊர் | கெங்கராம்பாளையம் | வயது | 48 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 16/03/2026 |

இன்று (16.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

1வது எதிரி. 2ம் எதிரி ஆஜரில்லை குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் தற்போது கெங்கராம்பாளையம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். கடந்த 2.5.2018 அன்று கண்டமங்கலம் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது கலைச்செல்வி என்பவர் எனக்கு உதவியாளராக இருந்தார் அன்றைய தினம் மதியம் 1.30 மணிக்கு கண்டமங்கலம் உதவி ஆய்வாளர் அழைத்ததன் பேரில் கண்டமங்கலம் பேருந்து நிறுத்தம் சென்றோம் அங்கே ஏற்கனவே நடந்த சம்பவத்தில் கத்தி, தடி , மாருதி ஸ்விப்ட் கார், உடைந்த கண்ணாடிகள் ஆகியவைகளை கைப்பற்றுதல் மகசரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள் அந்த கைப்பற்றுதல் மகசரில் நான் சாட்சியாக கையெழுத்திட்டேன் போலிசார் என்னை விசாரித்தார்கள் கைப்பற்றுதல் மகசர் **அதசாஆ4.**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை யார் விசாரித்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் விசாரித்தார். உதவி ஆய்வாளர் அழைத்ததால் நான் சென்றபோது எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் மூவிங் பதிவேட்டில் பதிவு செய்தேனா என்றால் இல்லை. உதவி ஆய்வாளர் எத்தனை மணிக்கு விசாரித்தார் என்றால் 1.30 மணிக்கு விசாரித்தார். காவல் நிலையத்திற்கும் எங்களது அலுவலகத்திற்கும் சுமார் 100 மீட்டர் தொலைவு என்றால் சரிதான். நான் கையெழுத்திட்டதாக சொல்லும் கைப்பற்றுதல் மகசர் எங்கு வைத்து யாரால் தயார்செய்யப்பட்டது என்றால் காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது. எங்கள் முன்பாக எதுவும் கைப்பற்றப்படவில்லை போலிசாருக்கு ஆதரவாக எங்கள் முன் பொருட்கள் கைப்பற்றியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-. A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge,

Villupuram

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

S.C.No.69/2024

LW-5, (PW -6)

| | | | |
|---|---|---|---|
| பெயர்; | பாலாஜி | மதம் | |
| த.பெ. | ஆறுமுகம் | தொழில் | |
| ஊர் | நவமால்மருதூர் | வயது | 38 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 16/03/2026 |

இன்று (16.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

1வது எதிரி. 2ம் எதிரி ஆஜரில்லை குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ்சாடசியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

2.5.2018 அன்று பகல் சுமார் 12 மணிக்கு எனது உறவினர் பாலு என்பவருடன் பாண்டிச்சேரி செல்வதற்காக கண்டமங்கலம் பஸ் ஸ்டாப் அருகே நின்றுகொண்டிருந்தபோது ஜனா மற்றும் கதிரவன் ஆகியோர்கள் வீச்சருவால் மற்றும் உருட்டுக்கட்டையுடன் அங்கிருந்த டீ கடை அருகில் மாமூல் கேட்டு டீ கிளாசுகளை உடைத்து அராஜகம் செய்துகொண்டிருந்தவர்களை கண்டமங்கலம் போலிசார் மடக்கி பிடிக்க முயற்சித்தபோது எதிரி ஜனா வீச்சருவாளால் உதவி ஆய்வாளரை வெட்ட வந்தார் ஆனால் அவர் தப்பித்துக்கொண்டார். பின்னர் ஜனா தப்பி ஓடிவிட்டார் கதிரவனை போலிசார் பிடித்துவிட்டார்கள் என்று போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-. A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge,

Villupuram

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

S.C.No.69/2024

LW-3, (PW -5)

| பெயர்; | ராமன் | மதம் | |
|---|---|---|---|
| த.பெ. | பரசுராமன் | தொழில் | |
| ஊர் | திருச்சி | வயது | 38 |
| மாவட்டம் | திருச்சி | தேதி | 16/03/2026 |

இன்று (16.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

1வது எதிரி. 2ம் எதிரி ஆஜரில்லை குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் தற்போது திருச்சி மாவட்டம் திருவெரும்பூர் மதுவிலக்கு பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2.5.2018 அன்று கண்டமங்கலம் காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியிலிருந்தபோது பகல் 12 மணியளவில் நான் மற்றும் காவலர் வெங்கிடேசன் என்பவரும் நிலைய ஆஜரிலிருந்தபோது உதவி ஆ்ய்வாளர் திரு. பாலமுருகன் என்பவருக்கு கண்டமங்கலம் பேருந்து நிறுத்த்ம் அருகே உள்ள சொக்கலிங்கம் டீ கடை எதிரில் பி்ன்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்து ஜெனா (எ) சின்னஜெனா (எ) ஜனார்த்தனன் மற்று்ம் கதிரவன் ஆகியோர்கள் டீ கடையில் காசு கேட்டு கண்ணாடி ரம்ளர்களை உடைத்து சேதபடுத்தி பிரச்சனை செய்துகொண்டிருப்பதாக கிடைத்த தகவலின் படி நாங்கள் உதவி ஆய்வாளருடன் கண்டமங்கலம் பேருந்து நிறுத்தத்திற்குச் சென்றோம். நாங்கள் போய் அங்கே இருந்த எதிரிகள் ஜனா மற்றும் கதிரவன் ஆகியோர்களை பிடிக்க முற்பட்டபோது ஜனா என்பவர் வீச்சருவாளால் உதவி ஆய்வாளரை வெட்ட வரு ம்போது சுதாரித்து விலக்கிகொண்டார் அப்போது கதிரவன் கட்டையால் உதவி ஆய்வாளரை தாக்க வந்தார். நாங்கள் இரு வரும் வளைந்தது பிடிக்க முற்பட்டபோது அருகில் இருந்த கார் பதிவு எண்.பிஒய். 01 பிடபிள்யு 6199 என்ற ஸ்விப்ட் காரில் எதிரி ஜனா என்பவர் கத்தியை காட்டி மிரட்டி ஏறி சென்று தலைமறைவாகிவிட்டார். கதிரவனை சம்பவ இடத்தில் மடக்கிப் பிடித்தோம். பிறகு காவல் நிலையம் வந்துவிட்டேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சொக்கலிங்கம் என்பவர் புகார் கொடுத்தாரா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2.5.2018க்கு பிறகு கண்டமங்கலம் காவல் நிலையத்தில் எவ்வளவு நாள் நான் பணிபுரிந்தேன் என்றால் சுமார் 6 மாதங்கள் பணிபுரிந்தேன். இந்த வழக்கு பதிவு செய்த பிறகு ஜனா மீது குண்டர்தடுப்பு போடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி ஜனா என்பவரை எந்த தேதியில் கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உதவி ஆய்வாளருக்கு நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் தடுக்க முயற்சி செய்தோமா என்றால் தடுக்க முறச்சி செய்தோம்.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/-. A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge,
Villupuram